பெரிய புராண விழா - மாணவர் சமயப் போட்டிகள்

தேதி: 26 டிசம்பர் 2026 (சனிக்கிழமை)

நேரம்: மதியம் 1.30

இடம்: அருள்நெறி நிலையம்

தொடர்புக்கு: திருமதி க. மோகனா - +60123041471

முனைவர் க. திலகவதி - +60192640542

பெயர்:

(சான்றிதழில் இடம்பெற வேண்டியவாறு)

பிறந்த தேதி:

வயது:

பெற்றோர்/ஆசிரியர் பெயர்:

போட்டியாளர் பிரிவுகள்: பிரிவு 1 / பிரிவு 2 / பிரிவு 3 / பிரிவு 4 / பிரிவு 5

போட்டி பிரிவுகள்

- மனனப் போட்டி
- பேச்சுப் போட்டி
- கட்டுரைப் போட்டி
- சமயப் புதிர் போட்டி

தொலைபேசி எண்:

<u>பங்கேற்பாளரின் உறுதிமொழி:</u>

1. *விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் நான் கட்டுப்படுகிறேன்*
2. *நீதிபதிகளின் தீர்ப்பே முடிந்த முடிபு என்பதைப் புரிந்து கொண்டுள்ளேன்*

……

ஒப்புக்கொள்கிறேன்

பங்கேற்பாளர்கள் படிவங்களை கைபேசி புலனம் வழியாக 2026 டிசம்பர் 16ஆம் திகதிக்கு முன்பாக முன்பதிவு செய்ய வேண்டும்.

முன்பதிவுக்கான கைபேசி எண்: 0123041471

பெரிய புராண விழா/ மாணவர்கள் சமய போட்டிகள் 2027

சனிக்கிழமை - 26-12-26

பிரிவு 1

மனனப் போட்டி:-

பிரிவு 1: கீழ்க்காணும் (அ,ஆ) இரண்டையும் சொல்ல வேண்டும்

அ) ஆத்திசூடி 90 முதல் 99

90. மிகைபடச் சொல்லேல்
91. மீதூண் விரும்பேல்
92. முனை முகத்து நில்லேல்
93. மூர்க்கரோடு இணங்கேல்
94. மெல்லில் நல்லாள் தோள்சேர்
95. மேன்மக்கள் சொற்கேள்
96. மை விழியார் மனை அகல்
97. மொழிவது அற மொழி
98. மோகத்தை முனி
99. வல்லமை பேசேல்

ஆ) உலக நீதி பாடல் 11

அஞ்சுபேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்
அதுஏது இங்குஎன்னில்நீ சொல்லக் கேளாய்
தஞ்சமுடன் வண்ணான் நாவிதன்தன் கூலி
சகலகலை ஓதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சறுத்த மருத்துவச்சி கூலி
மகாநோவு தனைதீர்த்த மருத்துவன்தன் கூலி
இன்சொல்லுடன் இவர் கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானோ ஏமன் தானே

மனனப் போட்டி

பிரிவு 2: கீழ்க்காணும் (அ, ஆ) இரு பகுதிகளும்

அ) கொன்றை வேந்தன்

47) தோழனோடும் ஏழைமை பேசேல்
48) நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்
49) நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை
50) நிற்கக் கற்றல் சொல்திறம் பாமை
51) நீரகம் பொருந்திய ஊரகத் திரு
52) நுண்ணிய கருமமும் எண்ணித் துணி
53) நூல்முறை தெரிந்து சீலத் தொழுகு
54) நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்
55) நேரா நோன்பு சீர் ஆகாது
56) நைபவர் எனினும் நொய்ய உரையேல்
57) நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்
58) நோன்பு என்பது கொன்று தின்னாமை

ஆ) திருக்குறள்

சுற்றம் தழால் (அதிகாரம் 53) **அல்லது** புறங் கூறாமை (அதிகாரம் 19)

அதிகாரம் 53 - சுற்றம் தழால்

பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள (1)

விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவுந் தரும். (2)

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. (3)

சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். (4)

கொடுத்தலும் இன்சொல்லும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும். (5)

பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல் (6)

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. (7)

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். (8)

தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரண மின்றி வரும். (9)

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல். (10)

அதிகாரம் 19 - புறங் கூறாமை

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறா னென்றல் இனிது. (1)

அறனழீஇ யல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை. (2)

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும். (3)

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். (4)

அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையால் காணப் படும். (5)

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும். (6)

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். (7)

துன்னியார் குற்றமுந் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு. (8)

அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை. (9)

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு. (10)

மனனப் போட்டி

பிரிவு 3 கீழ்க்காணும் இரு பகுதிகளும்:

அ) திருக்குறள்

அதிகாரம் (65) சொல் வன்மை **அல்லது** அதிகாரம் (81) பழைமை

அதிகாரம் (65) சொல் வன்மை

நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று. (1)

ஆக்கமும் கேடும் அதனால் வருதலான்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. (2)

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். (3)

திறன் அறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனின்ஊங்கு இல். (4)

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து. (5)

வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள். (6)

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. (7)

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். (8)

பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். (9)

இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது
உணர விரித்துரையா தார். (10)

அதிகாரம் (81) பழைமை

பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. (1)

நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றுஅதற்கு
உப்பாதல் சான்றோர் கடன். (2)

பழகிய நட்பு எவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை. (3)

விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையான்
கேளாது நட்டார் செயின். (4)

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க
நோதக்க நட்டார் செயின். (5)

எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. (6)

அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். (7)

கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாள்இழுக்கம் நட்டார் செயின். (8)

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. (9)

விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார். (10)

ஆ) நல்வழிப் பாடல்கள் இரண்டும்

பாடல் 35

பூவாதே காய்க்கு மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே - தூவா
விரைத்தாலு நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு

பாடல் 37

வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்து மில்லை - நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலைப்படேல் நெஞ்சேமெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி

மனனப் போட்டி (பிரிவு 4)

பிரிவு 4. கீழ்க்காணும் இரு பகுதிகளும்:

அ). திருக்குறள் - அதிகாரம் (88) பகைத்திறம் தெரிதல் **அல்லது**
அதிகாரம் (108) - கயமை

அதிகாரம் (88) பகைத்திறம் தெரிதல்

பகையென்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. (1)

வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை (2)

ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். (3)

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு. (4)

தன்துணை இன்றால் பகையிரண்டால் தானொருவன்
இன்துணையாக் கொள்கஅவற்றின் ஒன்று. (5)

தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல். (6)

நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து. (7)

வகையறிந்து தன்செய்து தன்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு. (8)

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. (9)

உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். (10)

அதிகாரம் (108) - கயமை

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பார் யாம்கண்டது இல். (1)

நன்றறி வாரின் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர். (2)

தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான். (3)

அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ். (4)

அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது. (5)

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான். (6)

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு. (7)

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்;
கொல்லப் பயன்படும் கீழ். (8)

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ். (9)

எற்றிற்கு உரியர் கயவரொன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து. (10)

ஆ). மூதுரைப் பாடல்கள் இரண்டும்

பாடல் 13

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்

பாடல் 14

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி

பிரிவு 5

திருவருட்பயன் - 1. பதி முதுநிலை

1. பதி முதுநிலை

1. அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து.

2. தன் நிலைமை மன்உயிர்கள் சாரத்தரும் சத்தி
பின்னம் இலான் எங்கள்பிரான்.

3. பெருமைக்கும் நுண்மைக்கும் பேர்அருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்பு இன்மையான்.

4. ஆக்கி எவையும் அளித்து ஆசுடன் அடங்கப்
போக்கும் அவன் போகாப்புகல்.

5. அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவம் உடையான் உளன்.

6. பல் ஆர்உயிர் உணரும் பான்மைஎன மேல்ஒருவன்
இல்லாதான் எங்கள் இறை.

7. ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு
வான்நாடர் காணாத மன்.

8. எங்கும் எவையும் எரிஉறு நீர்போல் ஏகம்
தங்கும் அவன்தானே தனி.

9. நலம்இலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலம்இலன் பேர் சங்கரன்.

10. உன்னும் உளது ஐயம் இலது உணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து.